DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

**SC.No.111 /2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 3 | நாள் | : | 27.11.2025 |
| பெயர் | : | கருப்பசாமி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 27th day of November 2025.

**சாட்சி மூலம் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகிரி பேருந்து நிறுத்தத்தில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டி வருகிறேன். பேருந்து நிறுத்தத்தில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டிற்கு நேதாஜி ஆட்டோ ஸ்டாண்ட் என்ற பெயரில் இயங்கி வருகிறது. குமரேசன் என்பவர் அந்த ஸ்டாண்டிற்கு தலைவர், செயலாளர் பாலசுப்பிரமணியன், பொருளாளர் ராமசுப்பு. ஆஜர் எதிரியைத் தெரியும். ராமசுப்புவையும் தெரியும். அவரது மனைவியைத் தெரியும். இரவு எங்கள் ஸ்டாண்டில் உள்ள வாகனங்களை 11 மணிக்கு மேல் இயக்கக்கூடாது என்று நாங்கள் விதிமுறை வைத்துள்ளோம். எதிரி எங்கள் ஆட்டோ ஸ்டாண்டில் உறுப்பினர் ஆவார். ஆனால் விதிமுறைக்கு

மாறாக இரவு 11 மணிக்கு மேல் ஆட்டோ ஓட்டினார். அதை இராமசுப்பு கண்டித்தார் 15.08.2018ம் தேதி இரவு 8 மணி முதல் 8.30க்குள்ளாக தெற்கேயுள்ள உள்ள எங்கள் ஆட்டோ ஸ்டாண்டின் குடிசை பகுதியில் வைத்து கேட்டார். அப்போது எதிரிக்கும் இராமசுப்புவிற்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது. ஆஜர் எதிரி கையில் வைத்திருந்த கத்தியைக் கொண்டு இடது கழுத்து, கண்ணம் மற்றும் கையில் கத்தியால் குத்திவிட்டார். நான் செட்டிற்கு வெளியே நின்றிருந்தேன். நானும், ரமேசும், பாலசுப்பிரமணியனும், செந்தில்குமாரும் நின்று பேசிக் கொண்டிருந்தோம் சத்தம் கேட்டதும் நாங்கள் செட்டிற்குள் எட்டிப்பார்த்தபோது இராமசுப்பு அய்யோ விட்டுடா விட்டுடா என்று ஆஜர் எதிரியைப் பார்த்து சொன்னார். இராமசுப்பு எங்களை பார்த்து ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போங்கள் என்று கெஞ்சினார். இராமசுப்பு மனைவி சாந்தி சண்டை போட்டுக் கொண்டிருக்கும்போதே அங்கு வந்துவிட்டார். நானும், பாலசுப்பிரமணியனும், ரமேசும், சாந்தியும் இராமசுப்புவை ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு சிவகிரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு முதலுதவி அளித்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நாங்கள் ஆட்டோ ஸ்டாண்டிலிருந்து புறப்படும்போதே காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்துவிட்டோம். சுமார் 15 நிமிடத்திற்குள் போலீசார் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள் வந்து சாந்தியிடம் வாக்குமூலம் எழுதி வாங்கிக் கொண்டார்கள். பின்னர் தென்காசியிலிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அங்கு

இரண்டு நாட்கள் கழித்து இறந்துபோன விவரம் தெரிய வந்தது. என்னை மருத்துவமனையிலும் பின்னர் இரண்டு நாட்கள் கழித்தும் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.11.27 17:59:21 +0530